# MSMEs -க்களின் டிஜிட்டல் திறனாளர்கள்



## ஸ்வவலம்பன்

*அமைதியற்ற கனவுகளின் சிறகுகள்.......*

தகவல் தொகுப்பு
வரிசை மலர்-V

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி

sidbi

# <u>முகப்புரை</u>

அன்புள்ள ஸ்வவலம்பி,

SIDBI வங்கியின் ஸ்வவலம்பன் வாழ்த்துக்கள்!

2.0 கண்ணோட்டத்தை அங்கீகரித்துள்ள SIDBI, **சம்பர்க்** (தொடர்பு), **சாம்வாத்** (கலந்துரையாடல்), **சுரக்ஷா** (பாதுகாப்பு) மற்றும் **சம்ப்ரேஷேன்** (பரப்புதல்) என்பதில் கவனத்தை மாற்றி அமைத்துள்ளது. MSEs-க்கள் ''அமைக்கப்படுவதிலும்'', ''அதிகரிப்பதிலும்,'' கண்ணோட்டம் 2.0 நோக்கம் கொண்டுள்ளது. இதனால் நாட்டில் அதிக வேலைவாய்ப்புக்கள் உருவாகி, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி ஏற்படும். மேலும், தொழில்முனைப்புப் பண்பைப் பரப்பி, இளைஞர்களை "வேலை தேடுவோர்" என்ற நிலையில் இருந்து, "வேலை தருவோர்" என்னும் நிலைக்கு மாற்றுவதற்காகவும், கிராமங்களில் இருந்து மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்வதைக் கட்டுப்படுத்தவும், அடித்தட்டில் உள்ள சேவை செய்யப்படாத / குறைவான சேவைகள் செய்யப்பட்ட பகுதிகள்/பிரிவுகளுக்கும், ஒட்டுமொத்த MSE-க்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்வாதார வாய்ப்புக்களை நீடித்து நிலைத்த அடிப்படையில் ஊக்கப்படுத்தவும், 2018-ஆம் ஆண்டில் மிஷன் ஸ்வவலம்பன் என்னும் திட்டத்தை வங்கி தொடங்கியது.

அத்தகைய முயற்சிகளில் ஒன்றுதான் இந்த ஸ்வவலம்பன் தகவல் திரட்டு. இது தற்போதுள்ள மற்றும் திறன்படைத்த தற்சார்பாளர்களை இணைத்து, தொழில் முயற்சிகளில் அவர்களின் கனவுகளை நனவாக்க உதவுகிறது. தொழில்முனைப்பு பற்றிய அடிப்படை மற்றும் மேம்பட்ட அறிவாற்றலை உங்களுடைய இடத்திற்கே இது கொண்டு வருகிறது, புதிதுபுதிதாக என்ன நடக்கிறது/ புதிய திட்டங்கள்/முன்முயற்சிகள் ஆகியன பற்றிய புதுப்புதுத் தகவல்களை நீங்கள் அறியும்படி செய்து, அவற்றினால் நீங்களும் மற்றவர்களும் பயனடையும்படி செய்கிறது.

இதை வாசிப்பவர்களின் கருத்துக்களைத் திரட்டுகிறோம். உங்களுடைய கருத்துக்களை/ கேள்விகளை/ ஆலோசனைகளை எங்களுக்கு அனுப்புங்கள். அப்போதுதான் ஒவ்வொரு தொகுப்பையும் நாங்கள் மேம்படுத்த முடியும், இதை நாங்கள் எவ்வளவு அனுபவித்து எழுதினோமோ அவ்வளவு ஆனந்தத்துடன் நீங்கள் வாசித்து மகிழ்வீர்கள் என நம்புகிறோம்.

மகிழ்ச்சியுடன் வாசிக்க வாழ்த்துக்கள்!

# டிஜிட்டல் திறனாளர்கள்: கோட்பாடு

நம்மைச் சுற்றிலும் உலகம் விரைந்து மாறிக் கொண்டே இருக்கிறது. நமது வாழ்நாளில், டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்கள் போய் லேப்டாப்கள் வந்ததையும், சிடி-களும், டிவிடி-களும் மறைந்து யுஎஸ்பி ஃபிளாஷ் டிரைவ்களும் வந்திருப்பதையும் நாம் கண்டிருக்கிறோம். கிராமங்களில் தேசியத் தொலைக்காட்சியில் மக்கள் “இராமாயணம்” கண்டுகளித்த காலம் போய், இப்போது தங்களது தனித்தனி மொபைல் போன்களில் வெப் ஸீரிஸ்களைப் பார்க்கின்றனர். கூகிள் மேப்ஸ் காரணமாக, இப்போது எல்லாம் யாருமே தாங்கள் போக வேண்டிய இடத்திற்கு வழி தெரியாமல் திண்டாடுவதில்லை. ஹோம் டெலிவரி, மின்னியல் வர்த்தகம், மின்னியல் புத்தகங்கள்-இவை யாவுமே சில ஆண்டுகளுக்கு முன்பு நாம் கேள்விப்பட்டிராதன் நினைத்தும் பார்த்திராத புதுயுக விஷயங்கள்.

வங்கித் துறையை அடியோடு மாற்றும் வகையில் டெக்னாலஜி வந்துவிட்டது. வங்கிச் சேவைகளை நாம் பெறுவதும், வங்கிகள் புதுப்புது புராடக்டுகளை அறிமுகப்படுத்துவதும் மாறிவிட்டன. கேஷ் கவுன்ட்டர்களுக்கு முன்னால் நீண்ட வரிசைகள் மறைந்து, ஏடிஎம்-கள் வந்தன. இப்போது ஏடிஎம்-களின் இடத்தை டிஜிட்டல் வாலெட்டுகள், மொபைல் செயலிகள், மற்றும் யுபிஐ-கள் பிடிப்பதற்கு முயல்கின்றன. டெபிட் அட்டைகளை நிறுத்தி விடலாமா என்று கூட சில வங்கிகள் யோசிக்கின்றன.

வங்கியுடன் வாடிக்கையாளருக்கு உள்ள உறவில் மாற்றத்தை கோர் பேங்க்கிங் சொல்யூஷன் (CBS) ஏற்படுத்திவிட்டதால், பிரச்சினைகளை வங்கிக் கிளைகளே சுயேச்சையாகக் கையாள்கின்றன. கஸ்டமர் ரிலேஷன்ஷிப் மேனேஜ்மென்ட் (CRM) இருப்பதால் கஸ்டமரின் தேவைகளை வங்கிகள் நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ப அவர்களுடன் தொடர்பு கொண்டு தேவைக்கு ஏற்ற தீர்வுகளை வழங்க முடிகிறது. தொழில்நுட்பங்களின் விளைவாக ஸ்மார்ட் போன்கள் வந்துவிட்டதால், நிதி நிறுவனங்களின் சேவைகளை ஒரு பட்டனைத் தட்டிவிட்டுப் பெற முடிகிறது.

டிஜிட்டல் டெக்னாலஜியால் கஸ்டமர்களுக்கு சேவைகளை வழங்க முடிவதோடு, ஐடி கட்டமைப்பு வசதிகள் வேகவேகமாக வளர்ந்து வருவதால், பாரம்பரிய தொழில் நடைமுறைகள் மாற்றம் பெற்று, கஸ்டமருக்கு மேம்பட்ட சேவைகளை வழங்க முடிவதோடு, போர்ட்டபிலிட்டி அதிகரிக்கிறது, சிரமமின்றிப் பயன்படுத்த முடிகிறது, கஸ்டமருடன் அதிகம் தொடர்பு கொள்ள முடிகிறது, ஸ்மார்ட் மார்க்கெட்டிங் போன்ற வசதிகளும் கிடைக்கின்றன. முதலில் இருந்து முடிவு வரை டிஜிட்டல் என்பதால், பணியாளர்களின் இடையீடு இல்லாமலே அதிக வேகத்தில், ஒளிவுமறைவு இன்றி, தரமான, தேவைகளைப் புரிந்து கொண்டு, பொறுப்பேற்கும் முறையில் ஒவ்வொரு சேவையையும் கஸ்டமருக்கு எளிதாக வழங்க முடிகிறது.

MSEs நிறுவனங்களின் பல நீண்டகால பிரச்சினைகளுக்கு டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் அவற்றின் வாழ்க்கையை மாற்றுவதற்கு ஆயத்தமாக உள்ள டிஜிட்டல் திறனாளிகள் பற்றி இந்த தகவல் தொகுப்பின் தற்போதைய பதிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

# MSEs-க்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள்

**பசமச்சீரற்ற தகவல்**

ஒரு தொழில்முனைவாளர் தமது கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து நிறுவனத்தை நிறுவிடவும், அதை விட்டு வெளியேறவும், பலதரப்பட்ட பிஸினஸ்களில் திரும்பவும் நுழையவும் திட்டங்கள், ஸ்கீம்கள், முன்முயற்சிகள் ஆகியன பற்றிய நம்பகமான தகவல்கள் அவருக்குக் கிடைப்பது மிகவும் முக்கியமாகும். புதிதாகத் தொழில் தொடங்க விரும்பும் அல்லது ஏற்கனவே உள்ள MSEs -க்கள் இதுபோன்ற நம்பகமான தகவல்களை எதிர்நோக்குகின்றன. பிரகாசமான தொழில்நிறுவனம் உருவாகிட, மிகையான தகவல்களை வடிகட்டி, சரியான தகவல்களை, போதுமான அளவுக்கு, பொருத்தமான முறையில் வழங்க வேண்டியது கட்டாயமாகும்.

**பசுலபக் கடன்கள்**

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் MSEs நிறுவனங்களின் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஙநஉள் பிரிவுக்கு கடன் கிடைப்பது அவற்றின் அளவைப் பார்க்கும்போது நீண்டகாலமாகக் குறைவாகவே உள்ளது, ஒட்டுமொத்தமாக வங்கிகளுக்கு ஙநஉள்-க்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் விகிதம் குறைவாகவே உள்ள போதிலும், கடன் வழங்குவதற்கு ஆபத்தான பிரிவு என்றே MSEs-க்களை வங்கிகள் கருதுகின்றன. மேலும், கடன் வழங்கும் நிறுவனங்கள் நீண்டநெடும் நடைமுறை விதிகளை வைத்திருப்பதால், சிரமமின்றி கடன் பெற முடியாமல் MSEs-க்கள் சங்கடப்படுகின்றன. தொழில் முனைவாளர் தமது சௌகரியத்திற்கு ஏற்ப விண்ணப்பிக்கவும், பெறவும் சுலபமாகவும், விரைவாகவும், சிக்கல் இல்லாமலும் கடன் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை எப்போதும் இருந்து வருகிறது.

**பில்களுக்குப் பணம் கிடைப்பது:**

நடுத்தர மற்றும் பெரிய தொழில்நிறுவனங்களுக்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதில் MSEs-க்கள் முக்கிய பங்காற்றுகின்றன. எனினும், பெரிய & நடுத்தர நிறுவனங்களின் பேரம் பேசும் ஆற்றல் வலுவாக இருப்பதால் MSEs -க்கள் செய்த சப்ளைகளுக்குப் பணம் கிடைப்பது தாமதமாகிறது. இதன் விளைவாக, பொருட்களை வாங்கும் கார்ப்பொரேட் கம்பெனிகளையே MSEs -க்கள் சார்ந்திருக்க வேண்டியிருப்பதால், தாமதமான பேமென்ட் என்னும் பிரச்சினை தொல்லை கொடுக்கின்றது. மேலும், இவ்வாறு தாமதமாக பேமென்ட் கிடைப்பது பற்றி பொருத்தமான வழிகளில் புகார் செய்ய முடியாமலும் உள்ளன. விற்கப்பட்ட சப்ளைகளுக்கு உடனுக்குடன் பணம் கிடைப்பது நடப்புச் சொத்துக்களின் மிக முக்கியமான அம்சமாகும். ஒரு MSEs நிறுவனத்திடம் பணப்புழக்கம் இருப்பதற்கு இது மிகவும் முக்கிய தேவையாகும்.

**கை கொடுக்கும் ஆதரவு:**

இது குறு / புதிய தொழில் முனைவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள மிக முக்கியமான சவாலாகும், அவர்களிடம் எவ்வளவுதான் பிஸினஸ் நுட்பங்கள் இருந்தாலும், கடன் கிடைக்கும் வசதிகள், சட்டவிதிகளுக்கு இணங்குதல், மார்க்கெட் பிடித்தல் போன்றவற்றில் அடிப்படை அறிவு கூட இல்லாமல் பெரிய நிறுவனங்களை விட பின் தங்கி விடுகின்றனர். இதில், உதவித்தொகை பெறுவதற்காக விண்ணப்பப் படிவங்களை நிரப்புதல்/ புராஜக்ட் ரிப்போர்ட் / பேலன்ஸ் ஷீட் தயாரித்தல், ரிட்டர்ன் சமர்ப்பித்தல் போன்ற சாதாரண விஷயங்களும் அடங்கும். ஆகக்கடைசியில், தொழில்முனைவாளர்கள் பிஸினஸ் உலகின் சிக்கல்களில் சிக்கித் தவிக்கின்றனர். இதனால் அவர்களின் கடன் பெறுவதற்கான தகுதி மற்றும் பிஸினஸ் செய்யும் திறனின் அடிப்படையே ஆட்டம் கண்டு, அவர்களின் பிஸினஸுக்கு அகால மரணம் ஏற்பட்டு விடுகிறது.

**மார்க்கெட்டுடன் இணைப்பு:**

ஒரு MSEs சின்ன ஏரியாவுக்குள் செயல்படுகிறது அல்லது அதன் கஸ்டமர் ஆதாரம் சிறியதாக உள்ளது. MSEs -க்களால் புதிய மார்க்கெட்டுகளை பிடிக்க முடியாமல் போவது பிஸினஸ் தோல்விக்கு ஒரு முக்கிய காரணமாகும். கஸ்டமர் ஆதாரம் குறைவாக இருந்தால், இடர்கள் அதிகரித்து, மார்க்கெட் ஊசலாட்டங்களினால் பாதிக்கப்படுகின்றன.


**இணை உத்தரவாதம் இல்லாமை:**

ஒரு MSEs நிறுவனத்திற்கு ஆரம்பத்திலும், வளர்ச்சி காணும்போதும் பேங்க் நிதியுதவி தேவைப்படுகிறது, அதற்கு கடன் வழங்குவோர் எதிர்பார்க்கும் இணை உத்தரவாதம் கிடைப்பதில்லை. CGTMSE மற்றும் NCGTC போன்ற உத்தரவாதம் தரும் நிறுவனங்கள் மகத்தான சேவை ஆற்றினாலும், MSEs நிறுவனங்கள் தங்களது தகுதியைத் தெரிந்து கொள்ள முடியாமல் திண்டாடுகின்றன.

sidbi

# டிஜிட்டல் திறனாளிகள் மூலம் தீர்வுகள்

MSEs -க்கள் எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு தக்க தீர்வுகளை டிஜிட்டல் திறனாளர்கள் வழங்குகின்றனர். இதற்காக உள்ள பல வழிமுறைகளை இவ்வாறு வகைப்படுத்தலாம்:




## நிதி

### A) PSB லோன்கள்

நிதித் துறையில் அடிப்படை மாற்றத்தை ஃபின்டெக் நிறுவனங்கள் ஏற்படுத்துகின்றன. கிடைக்கும் டேட்டாக்களை மதிப்பிடுவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் கடன் வழங்கும் நடைமுறை விரைவுபடுத்தப்படுவதோடு, கடன் வழங்குவதுடன் தொடர்புடைய இடர்களும் குறைகின்றன. 59 நிமிடத்தில் PSB லோன் என்பது நாட்டில் உள்ள முன்னணி வங்கிகளின் குழுமத்துடன் சேர்ந்து SIDBI தொடங்கியுள்ள ஒரு திட்டமாகும். இந்த ஆன்லைன் மார்க்கெட்டில், MSEs -க்களின் பிஸினஸ் லோன்களுக்கு

(தவணைக்காலக் கடன்/ செயல்மூலதனக் கடன்) மற்றும் ரீட்டெய்ல் லோன்கள் (பெர்சனல் லோன், ஹோம் லோன் மற்றும் வாகனக் கடன்) பொது மற்றும் தனியார் துறை வங்கிகள் மற்றும் வங்கிசாராத நிதி நிறுவனங்களிடம் இருந்து 59 நிமிடத்திற்கும் குறைவான நேரத்தி கொள்கை அளவில் ஒப்புதல் தரப்படுகிறது.

இதனால் லோன்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான காலம் பல நாட்களில் இருந்து 59 நிமிடமாகக் குறைக்கப்பட்டு விட்டது, கொள்கை அளவில் லோன்களுக்கு ஒப்புதல் கடிதம் கிடைத்த பிறகு, சுமார் 7-10 அலுவல் நாட்களில் லோன் அனுமதிக்கப்படும்/ வினியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயனாளிக்கு உதவியாக உள்ள இந்த வலைதளம் இருப்பதால், கடன் வாங்குகிறவர் கடனுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் பெறுவதற்காக வங்கிக் கிளைக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டது. மேலும், இந்த வலைதளத்தில் வருமான வரி ரிட்டர்ன்கள், ஜிஎஸ்டி டேட்டா, பேங்க் ஸ்டேட்மென்ட் போன்ற ஆவணங்களை மதிப்பிடுவதற்கு மேம்பட்ட கணக்கீடு முறை பயன்படுத்தப்படுகிறது.

## விரைவாகவும், திறமையாகவும் கடன் கிடைப்பதற்காக PSB லோன்களின் அமைப்பு முறை

PSB LOANS in 59 MINUTES .com

ரீட்டெய்ல் கடன் பெறுகிறவர்

ஆன்லைனில் பதிவு செய்து விண்ணப்பித்தல்

### கஸ்டமர் டேட்டா நிரப்புதல்

- ITR
- பேங்க் ஸ்டேட்மென்ட்ஸ்
- டேட்டா நிரப்புதல்

### டேட்டா & இறுதிநிலை செக்கிங்

நுகர்வோர் குழு கண்காணிப்புக்கள்

### ஆட்டோ ஸ்கோர் & செக்கிங்


- ஆட்டோ ஸ்கோரிங்
- புராடக்ட்-பாலிஸி ஆட்டோ செக்
- ஆட்டோ தகுதி கணக்கீடு
- ஆட்டோ ஒப்புதல்

கடன் வழங்கும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி கஸ்டமருக்குக் கிடைக்கிறது

கொள்கை அளவில் ஒப்புதல் கடிதம் கையில் கிடைப்பது

## முக்கிய அம்சங்கள் மற்றும் பயன்கள்

- எந்த நேரமும், எங்கிருந்தும் விண்ணப்பிக்கலாம்
- எளிதில் புரிந்து கொள்ளலாம்
- உடனுக்குடன் பரிசீலனை
- ஆன்லைனில் கொள்கை அளவில் ஒப்புதல்
- குறைவான ஆவணங்கள்
- தொழில்நுட்ப அடிப்படையில் தகுதி செக் செய்யப்படுதல்
- மனித விருப்புவெறுப்பு கிடையாது
- ஒளிவுமறைவற்ற நிபந்தனைகள்




## மற்ற பயன்கள்

**கொள்கை அளவில் ஒப்புதல்**

- ரூ.10 லட்சம் வரை முத்ரா லோன்கள்
- ரூ. 1 லட்சம் முதல் ரூ.5 கோடி வரை MSEs தவணைக் கடன் மற்றும் செயல் மூலதனக் கடன்

**சௌகரியம்**

- MSEs லோன் பெறுவதற்காக வங்கிக்கு வராமலேயே ஒரு பட்டனை கிளிக் செய்து விண்ணப்பிக்கலாம்.

**விரைவான பரிசீலனை**

- எளிய நடைமுறை மூலம், விண்ணப்பதாரருக்கு 59 நிமிடங்களுக்குள்ளாகவே கொள்கை அளவில் ஒப்புதல் கிடைத்து விடுகிறது.

**ஜிஎஸ்டி TMSC கவரேஜ்**

- தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு இணை உத்தரவாதம் இல்லாமல் கடன் வழங்கிட இந்த வலைதளத்தில் வசதி உள்ளது.

**அக்கவுன்ட்டில் நேரடியாகப் பேமென்ட்**

- வழங்கப்படும் கடன் தொகை கடன் பெறுகிறவரின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.


**நீக்குப்போக்கான தவணைக்காலம்**

- தாங்கக்கூடிய வட்டிவிகிதத்துடன்

**PSB ஒருங்கிணைப்பு**

- இந்த அமைப்பில் 25-க்கும் அதிகமான பொதுத்துறை மற்றும் தனியார் துறை வங்கிகளும், வங்கிசாராத நிதி நிறுவனங்களும் இணைந்துள்ளன.

## வலைதளத்தை எவ்வாறு பயன்படுத்துவது




## B) BHIM-UPI

நாட்டில் MSEs நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதை ஊக்கப்படுத்திட, கடன் பெறுவதற்கான நடைமுறைகள் முழுவதையும் வங்கிகள் டிஜிட்டல் மயமாக்கியுள்ளன. லோனுக்காக விண்ணப்பிக்கும் கட்டத்தில், MSEs நிறுவனங்களிடம் இருந்து பூர்வாங்கத் தகவல்/ டேட்டா பாயின்ட்ஸ் பெறுவதில் இருந்து, லோன் பரிசீலனை, லோன் கண்காணிப்பு, இடர்களை அளவிட்டு மதிப்பிடுதல், மற்றும் ஒட்டுமொத்த ஆர்டர்கள், பேரிடர்கள் போன்ற நிலைமைகளில் உடனுக்குடன் லோன்களை மதிப்பிடுதல் வரை அனைத்துப் பணிகளும் கணிணி மூலமாகவே நடைபெறுகின்றன. வலைதளங்களை அல்லது மொபைல் போன்களைப் பயன்படுத்துவதில் MSEs நிறுவனங்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு டிஜிட்டல்மயத்தை நோக்கி அடிப்படை மாற்றம் செய்யப்பட்டிருப்பதால், சிக்கனமான முறையில் ஒப்புறுதி பெறுதல், கடன் வழங்குதல் பற்றி உடனடியாக மேம்பட்ட முடிவெடுத்தல், திரும்பச் செலுத்தும் காலத்தில் விதிகளுக்கு அதிகம் கட்டுப்படுதல் என்பன போன்ற வசதிகள் கிடைத்துள்ளன. மேலும், ஒளிவுமறைவின்றி ஆன்லைன் மூலம் பணப்பரிமாற்றம் நடைபெறுவதால் நீண்டகாலப் போக்கில் ஙநஉள் நிறுவனங்களுக்குப் பயனளிக்கும்.

*டிஜிட்டல் மயமாகி, அதிகாரத்தின் ஆற்றலைப் பெறுங்கள்.*

**ரீட்டெய்ல் பேமென்ட் சிஸ்டம்ஸ்**

பேமென்ட் செய்வதற்குப் பல முறைகள் உள்ளன. அவற்றில், நேஷனல் எலக்ட்ரானிக் ஃபண்டு டிரான்ஸ்ஃபர் (NEFT), இம்மீடியட் பேமென்ட் சர்வீஸ் (IMPS), ரியல் டைம் க்ராஸ் செட்டில்மென்ட் (RTGS) ஆகியன பயனாளிகளின் பணப்பரிமாற்றத் தேவைகளை நிறைவு செய்கின்றன. NEFT 24x7 மணி நேரமும் இயங்கி, எந்த நேரத்திலும் ஆன்லைனில் பணம் கிடைக்க வசதி செய்கிறது. ஐஆPளு முறையும் 24ஷ்7 மணி நேரமும் இயங்கி உடனுக்குடன் பணம் பரிமாறப்படுவதற்கு உதவுகிறது. இதில் தபஎந வங்கிகளுக்கு இடையிலான பணப்பரிமாற்றம் செய்ய பயன்படுவதோடு, ரூ.2,00,000-த்துக்கும் அதிகமாக பெரிய தொகையை பரிமாற்றம் செய்யம் வகை செய்கிறது.

யுனிஃபைடு பேமென்ட் இன்டர்ஃபேஸ் (UPI) மூலம் மொபைல் பேமென்ட் சிஸ்டத்தில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுவிட்டது. நாட்டில் எங்கிருந்தும், எந்த நேரத்திலும், எந்த மாதிரியும் பில் பேமென்ட் செய்வதற்கு பாரத் பில் பேமென்ட் சிஸ்டம் (BBPS) உதவுகிறது. இது எல்லா வகையான எலக்ட்ரானிக் பேமென்ட்டுகளுக்கும் ஆதரவாக உள்ளது.

பாரத் இண்ட்டர்ஃபேஸ் ஃபார் மணி (BHIM) என்பது யுனிஃபைடு பேமெண்ட் இண்ட்டர்ஃபேஸ் (UPI) பயன்படுத்தி சுலபமாகவும், விரைவாகவும், எளிதாகவும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலியாகும். இந்த செயலி மூலம் மொபைல் எண் அல்லது வெர்ச்சுவல் பேமென்ட் ஐடி (மடஐ ஐஈ) பயன்படுத்தி ஒரு வங்கியில் இருந்து இன்னொரு வங்கிக்கு பேமென்ட் செய்யலாம். மேலும், பணம் செலுத்தவும், எடுக்கவும் செய்யலாம்.




***Image source:*** *https://www.npci.org.in/*

## மற்ற பயன்கள்

| | |
|---|---|
| **பணம் அனுப்புதல்** | • வெர்ச்சுவல் பேமென்ட் ஐடி (UPI ID), அக்கவுண்ட் எண் மற்றும் ணத ஸ்கேன் என்ட்டர் செய்து பணம் அனுப்பலாம். |
| **பணத்திற்கு வேண்டுகோள்** | • வெர்ச்சுவல் பேமென்ட் ஐடி (UPI ID)-ஐ என்ட்டர் செய்து பணம் எடுத்துக் கொள்ளலாம். மேலும், BHIM செயலி மூலமும் மொபைல் எண்ணைப் பயன்படுத்தி நீங்கள் பணத்தை டிரான்ஸ்ஃபர் செய்யலாம். |
| **ஸ்கேன் & பே** | • ஸ்கேன் & பே மூலமாக ணத ஸ்கேன் செய்து பணம் செலுத்தலாம் அல்லது உங்களுக்கு மற்றவர்கள் சுலபமாக பணம் அனுப்புவதற்கு நீங்கள் QR கோடு உருவாக்கலாம். |
| **டிரான்ஸாக்ஷன்** | • பழைய டிரான்ஸாக்ஷன்கள் மற்றும் நிலுவையில் உள்ள யுபிஐ கலெக்ட் வேண்டுகோள்கள் பற்றி கவனிக்கலாம், |
| **பேங்க் அக்கவுன்ட்** | • உங்களுடைய BHIM செயலி மூலம் இணைக்கப்பட்ட பல பேங்க் அக்கவுண்ட்டு களுக்கு இடையே மாறிக் கொண்டே இருக்கலாம். உங்களுடைய யுபிஐ பின் செட் செய்யலாம்/ மாற்றலாம் அல்லது உங்கள் பேலன்ஸ் என்ன என்று பார்க்கலாம். |
| **மொழிகள்** | • BHIM இந்தி, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், வங்காளி, ஒடியா, கன்னடா, குஜராத்தி, மராட்டி, அஸ்ஸாமி, பெங்காலி என 13 மொழிகளில் கிடைக்கிறது. |
| **யூஸர்களைத் தடுப்பது** | • தவறான வழிகளில் பணம் எடுக்க வேண்டுகோள் அனுப்பும் யூஸர்களை நீங்கள் தடுக்கலாம்/ ஸ்பேம் செய்யலாம். |
| **அந்தரங்கம்** | • செகண்டரி யுபிஐ ஐடி உருவாக்கப்படுமானால் (முடக்கப்பட்ட யுபிஐ ஐடிக்கான QR-உம் முடக்கப்படுமானால்) ஒரு யூஸர் யுபிஐ-யில் உள்ள மொபைல் எண்ணை இயக்கவும், முடக்கவும் உதவுகிறது. |
| **பேமென்ட் நினைவூட்டல்கள்** | • உங்களுடைய சௌகரியப்படி பேமென்ட்டுகளை திட்டமிட்டுக் கொள்ளலாம். |
| **பில்களை பிரிப்பது** | • ஒரு பட்டனை கிளிக் செய்வதன் மூலம் பல யுபிஐ யூஸர்களுக்கு இடையே பில்களைப் பிரித்துக் கொள்ளலாம். |

**BHIM UPI செயலியை எவ்வாறு பயன்படுத்துவது**



***Image source:*** *https://www.npci.org.in/*

**BHIM UPI செயலி மூலம் சிரமமின்றி பணப்பரிமாற்றம் செய்ய பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்:**

கூகிள் பிளே ஸ்டோர்/ ஆப்பிள் ஆப் ஸ்டோரில் இருந்து BHIM UPI செயலியைப் பதிவிறக்கம் செய்து இன்ஸ்டால் செய்யவும்.

உங்களுக்கு விருப்பமான மொழியை செலக்ட் செய்யவும்.

உங்களுடைய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள மொபைல் எண்ணுள்ள ஸிம் கார்டை செலக்ட் செய்யவும்.

செயலிக்குள்நுழைய அப்ளிகேஷன் பாஸ்கோடு செட் செய்யவும்.

பேங்க் அக்கவுன்ட் ஆப்ஷனைப் பயன்படுத்தி உங்களுடைய பேங்க் அக்கவுன்ட்டை இணைக்கவும்.

டெபிட் கார்டின் கடைசி 6 இலக்கங்களையும், டெபிட் கார்டு காலாவதி ஆகும் தேதியையும் கொடுத்து யுபிஐ பின் செட் செய்யவும்.

நங்க் கிளிக் செய்து, யுபிஐ ஐடி அல்லது ஆதார் எண் என்ட்டர் செய்யவும். நீங்கள் யாருக்கு பணம் அனுப்ப வேண்டுமோ அவரது QR-ஐ பயன்படுத்தி, ஸ்கேன்&பே செய்யலாம்.

பணப்பரிமாற்றத்தை நிரூபிப்பதற்காக நீங்கள் முன்பு செட் செய்த யுபிஐ பின் என்ட்டர் செய்யவும்.

பணப்பரிமாற்றத்தின் நிலையைப் பார்ப்பதற்கு டிரான்ஸாக்ஷன் ஹிஸ்டரியைப் பார்க்கவும்.

## C) RXIL

MSEs நிறுவனங்களுக்கு வியாபாரம் மூலம் பெறக்கூடிய பணத்தை பாதுகாப்பான, ஆன்லைன் வழியில் பெறுவதற்காக 2014-ஆம் ஆண்டில் TReDS, என்னும் முறையை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தியது. TReDS தொடர்பான இன்வாய்ஸ் டிஸ்கவுன்ட்டிங்கில் MSEs சப்ளையர், வாங்கும் கார்ப்பொரேட்டுகள், நிதியுதவி செய்வோர் என மூன்று தரப்பினர் ஈடுபடுகின்றனர். இதில் டிஸ்கவுன்ட்டிங் முறையைப் பொறுத்து, வாங்குகிறவர் அல்லது சப்ளையர் இருவரில் யாராவது ஒருவர் இன்வாய்ஸை பதிவேற்றம் செய்கிறார். அதை இன்னொரு தரப்பினர் அங்கீகரிக்கிறார். இந்த ஆன்லைன் வசதியில் ஏலத்தை சப்ளையர் ஏற்றுக் கொண்டதும், ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் டிஸ்கவுன்ட் தொகை அக்கவுன்ட்டில் வரவு வைக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் தொகை கார்ப்பொரேட்டுகளிடம் இருந்து அல்லது அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட இதர வாங்குவோரிடம் இருந்து வரவேண்டிய பாக்கியாக இருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு ஆன்லைன் வசதிதான் RXIL. இது SIDBI-NSE-இன் கூட்டு முயற்சியாகும். ரிசர்வ் வங்கி வகுத்த வழிகாட்டு விதிகளின்படி, இந்த TReDS என்னும் டிரேட் ரிஸீவபிள்ஸ் டிஸ்கவுண்ட்டிங் சிஸ்டத்தை RXIL என்னும் ரிஸீவபிள்ஸ் எக்சேஞ்ஜ் ஆஃப் இந்தியா இயக்குகிறது. பல ஃபைனான்ஸியர்கள் மூலமாக MSEs -க்களின் டிரேட் ரிஸீவபிள்ஸ்களுக்கு நிதியுதவி செய்யும் ஓர் எலக்ட்ரானிக் மேடைதான் TReDS.

### TReDS மேடை

**MSEs சப்ளையர்**

வாங்குவோருக்கு சரக்குகள்/ சேவைகளை சப்ளை செய்கிறது

**வாங்குவோர்**

அ) கார்ப்பொரேட்டுகள்
ஆ) அரசுத் துறைகள்
இ) பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவை

**ஃபைனான்ஷியர்**

அ) வங்கிகள்
ஆ) வங்கிசாரா நிதிநிறுவனங்கள்

**MSEs-க்களுக்கு TReDS எவ்வாறு பயனளிக்கிறது**

**உரிய நேரத்தில் கடனுதவி**

- வாங்குவோர், விற்போர் மற்றும் ஃபைனான்ஷியர் என்று தொடர்புடைய அனைவரையும், அதே போல, ரிஸீவபிள் ஃபைனான்ஸிங் நடைமுறை முழுவதையும் ஒரு பொதுவான ஆன்லைன் வழியில் கொண்டு வருவதால், MSEs -க்களுக்கு உரிய நேரத்தில் பேமென்ட்ஸ் கிடைக்கின்றன.

**வட்டிவிகிதம் குறைகிறது**

- பெரிய கார்ப்பொரேட் அளவில் ஃபைனான்ஷியர் செயல்படுவதால், ஏமாற்றும் இடர் குறைகிறது. இதனால் வட்டிவிகிதம் குறைகிறது.

**இணை உத்தரவாதம் தேவையில்லை**

- விற்பனை செய்யும் MSEs கடன் பெறுவதற்காக எந்த ஒரு இணை உத்தரவாதமும் தரவேண்டியதில்லை என்பது TReDS வசதியின் சிறப்பு அம்சமாகும்.


**செயல் மூலதன வரம்பு பாதிக்கப்படுவது இல்லை**

- TReDS முறையில் பெறப்படும் நிதி 'ஆஃப் பேலன்ஸ் ஷீட் எக்ஸ்போஷரின்' ஒரு பகுதி என்பதால், அதனால் MSEs-யிடம் உள்ள செயல் மூலதனத்தின் வரம்பில் மோசமான பாதிப்பு ஏற்படுவதில்லை.

**MSEs-க்கு பாதிப்பு கிடையாது**

- பேமென்ட் செய்வதில் தாமதமோ, பேமென்ட் செய்யாமல் இருந்தாலோ அதனால் MSEs நிறுவனம் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்க வேண்டியதில்லை. MSEs-யிடம் தேவையான பேமென்ட் செய்துவிட்டு, பணம் பெறுவதற்கான படிவத்தை ஃபைனான் ஷியர் வாங்கிவிட்டதால், பேமென்ட் தாமதம்/ பேமென்ட் செய்யப்படாமல் இருத்தல் தொடர்பான இடர்களை அவரே ஏற்கிறார். எனவே பேமென்ட் செய்யப்படாவிட்டால், அது ஃபைனான்ஷியருக்கும், கார்ப்பொரேட் நிறுவனத்திற்கும் இடையிலான பிரச்சினை ஆகிவிடுகிறது.

**<u>வலைதளத்தை எவ்வாறு பயன்படுத்துவது</u>**




**ஃபேக்டரிங் யூனிட்* (FU) என்பது TReDS முறையில் இன்வாய்ஸ் அல்லது பில்களை பரிமாறிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பெயராகும். ஒவ்வொரு ஊம-வும், கார்ப்பொரேட் அல்லது அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட மற்ற வாங்குகிறவரின் பொறுப்பை உறுதிப்படுத்துகிறது. இந்த ஊம-வை விற்பவராக அல்லது வாங்குகிறவராக இருக்கிற ஙநஉள் உருவாக்கலாம். அதை ஙநஉள் உருவாக்கிவிட்டால், அந்த நடைமுறை ஃபேக்டரிங் எனப்படுகிறது; அதை கார்ப்பொரேட் அல்லது இதர வாங்குவோர் உருவாக்கினால் அது ரிவர்ஸ் ஃபேக்டரிங் எனப்படுகிறது.*

# நிதி சாராதவை

**A) உதயமிமித்ரா & ஸ்டேண்ட் அப் இந்தியா வலைதளம்:** இவை இரண்டும் (www.standupmitra.in & www.udyamimitra.in) இரட்டை வலைதளங்களாகும். இவை ஷெட்யூல்டு வர்த்தக வங்கிகள், ஃபிண்டெக், வங்கிசாரா நிதி நிறுவனங்கள், SFB-கள், பக்கபலமாக இருந்து கைகொடுக்கும் முகமைகள் (PMKK, PMKVY, RSETIs, RUDSETIs), CSC-கள், தொழில் சங்கங்கள், நபார்டு (SUCC) & SIDBI போன்ற தொடர்புடைய அனைத்து அமைப்புக்களையும் இணைக்கின்றன.

**உதயமிமித்ரா வலைதளம்** (இது ஸ்டேன்ட் அப் இந்தியா வலைதளத்தின் ஐடி கட்டமைப்பைப் பயன்படுத்துகிறது). இது பல கிரெடிட் பிளஸ் சேவைகளை முதலில் இருந்து முடிவு வரை வழங்குகிறது. பக்கபலமாக இருப்பது, விண்ணப்பத்தைப் பின்தொடர்வது, தொடர்புடைய பலதரப்பினருடனும் பலமுறை தொடர்பு கொள்வது என்று பல நோக்கங்களைக் கொண்டுள்ளது. இதில் வடிகட்டப்பட்ட விண்ணப்பங்கள் கிடைப்பதால் கடன் கொடுப்பவர்கள் இந்த வலைதளத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர். மேலும், கடன் பெறுகிறவர்கள் இதில் நம்பகமான தகவல், கேள்விகளுக்கு விடைகள், பேங்க்கபிளை எவ்வாறு உருவாக்குதல்/ அதைத் தக்க வைத்தல் என்று பலவற்றுக்காக இதைப் பயன்படுத்துகின்றனர். பின்வரும் வகையில் இந்த வலைதளம் உதவி வழங்குகிறது:

**பேங்க்கபிலிட்டி கிட்**

நம்பகமாக இருப்பதற்கும், நிதி ஒழுங்கைப் பராமரிக்கவும், இதை விண்ணப்பதாரர் ஒரு வழிகாட்டி சாதனமாகக் கொள்வதால் இந்த கிட் உருவாக்கப்பட்டு, வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**பசம்ரிதி சாட்போட்**

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு ஆன்லைனில் உதவி வழங்குதல்

**புரொஜெக்ட் புரொஃபைல்கள்**

இந்த வலைதளத்தில் இருக்கும் 325+ புரொஜெக்ட் புரொஃபைல்கள் விண்ணப்பதாரர்களுக்கு தங்களுக்குரிய தொழிலைக் கண்டறிந்து தேர்ந்தெடுப்பதற்காக வழிகாட்டுகின்றன.

**குறிப்புப் பொருட்கள்**

ஒலி-ஒளி (AV) மற்றும் ஸ்வவலம்பன் தகவல் தொகுப்புக்கள் (3 புத்தகங்கள்) MSMEs-க்கள் எளிதில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக இந்த வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**கிரெடிட் கனெக்ட்**

இந்த வலைதளத்தில் சுமார் 140 கடன் வழங்கும் நிறுவனங்கள் 1.3 லட்சத்திற்கும் அதிகமான கிளைகளுடனும், 7000+ தீவிரமான ஆதரவு முகைமகளுடனும் (CCCs/ CCIs போன்ற சான்றிதழ் பெற்ற கிரெடிட் ஆலோசகர்கள் உள்பட) இடம்பெற்றுள்ளன

**மேம்பட்ட இ-டூல்கள்**

இந்த வலைதளத்தில் பல மேம்பட்ட இ-டூல்கள், அதாவது ஹேண்ட் ஹோல்டிங் இன் வெர்ச்சுவல் என்விரோன்மெண்ட் (HAVE), கிரெட்டி பிரோ ஸ்கோர், E-KYL, E-alerts, CGTMSE/NCGTC-க்கான ரூல் இஞ்சின், அக்ஸெஸ் டூல் கிட் போன்றவை இடம்பெற்றுள்ளன.

# முக்கிய அம்சங்கள்

**பொருத்தம் காட்டும் பிளாட்ஃபாரம்**

- இது கடன் கோரும் MSME நிறுவனங்களுக்கும், கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும், பக்கபலமாக இருக்கும் ஆதரவு முகைமைகளுக்கும் பொருத்தம் காட்டும் பணியைச் செய்கிறது. MSME பலதரப்பட்ட லோன் விண்ணப்பங்களை ஏற்கும் வகையில் இந்த வலைதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது 10 கோடி வரை லோன்களை இதில் தேடலாம். தொடர்புடைய பல்வேறு தரப்பினரை ஈடுபடுத்தும் ஓர் ஆதரவு சிஸ்டத்தை உருவாக்கும் மிக முக்கியமான நோக்கம் இதற்கு உண்டு.

**அனைவரையும் உள்ளடக்கிய அணுகல்**

- இதில் நிதி ( 1.3 லட்சம் கிளைகள்) மற்றும் நிதி சாராத சேவைகள் (17000+ ஆதரவு முகமைகள்) இரண்டுக்குமே அணுகல் உள்ளது. இதில் மூன்று சிறப்பம்சங்கள், அதாவது, (i) பக்கபல ஆதரவை நாடுவது, (ii) விருப்பப்படும் வங்கிகளுக்கு லோன்களை செலக்ட் செய்து விண்ணப்பிப்பது, (iii) லோன் பரிசீலனையை விரைவுபடுத்துவது ஆகியன உள்ளன.

**நிதிசாராத சேவைகளை அணுகலாம்**


- நிதி விஷயங்களில் பயிற்சி, திறன் வளர்ப்பு, புரொஜெக்ட் ரிப்போர்ட் தயாரித்தல், விண்ணப்பம் நிரப்புதல், பணிக்கூடங்கள், மார்ஜின் பணம்/ பல்வேறு மாநில/ மத்திய அரசு நிறுவனங்கள்/ கார்ப்பொரேஷன்கள் வழங்கும் உதவித் தொகைக்காக அணுகுதல் என்பன போன்ற வெவ்வேறு நிபுணத்துவம் சார்ந்த துறைகளில் ஆதரவு தரும் முகமைகள் இந்த வலைதளத்தில் இடம்பெற்றுள்ளன. தொழில்நிறுவனத்தின் வளர்ச்சிக் கட்டம் முழுவதிலும் தொழில்முனைவாளரின் தேவைகளைக் கவனிப்பதற்காக இந்த வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

**நிதிக்காக அணுகலாம்**


- தற்போது, சுமார் 1.3 லட்சம் கிளைகள் (பொது/ தனியார் துறை வங்கிகள், வங்கிசாராத நிதி நிறுவனங்கள், ஃபின் டெக்குகள், சிறுநிதி வங்கிகள்) இந்த வலைதளத்தில் இடம்பெற்றுள்ளன. கடன் அனுமதிப்பதற்கு முந்தைய நடைமுறைகளை எல்லா வங்கிகளிலும் ஒரே சீரானவையாக ஆக்கிட, கைகளால் இயக்கப்படுவதை விட மின்னியல் முறையில் இயக்குவதற்கு இந்த வலைதளம் வகை செய்கிறது, இதில் உள்ள மார்க்கெட் பிளேஸில், வங்கியாளர்கள் தங்களது கடன் வழங்கும் முறை மூலம் தங்களுக்கு இடையே போட்டி போடுவார்கள்.

# உதயமிமித்ரா வலைதளத்தில் விண்ணப்பதாரரின் அனுபவம்


## வலைதளத்தில்




## டேஷ்போர்டு




## லோன் விண்ணப்ப முறை



# <u>ஸ்டேன்ட் அப் இந்தியா வலைதளம்</u>

## ஷெட்யூல் சாதியினர் (SC), ஷெட்யூல் பழங்குடியினர் (ST) மற்றும் பெண் தொழில்முனைவாளர்கள் பசுமைத் தொழில் நிறுவனங்கள் அமைக்க ஊக்கப்படுத்துதல்.

ஸ்டேன்ட் அப் இந்தியா வலைதளம் (www.standupmitra.in) எஸ்ஸி, எஸ்டி மற்றும் பெண் தொழில்முனைவாளர்களின் தொழில்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுப்பதற்காக 3 தூண்களின் அடிப்படையில் இந்த டிஜிட்டல் மேடை இயங்குகிறது. அவை:

(i) கைகொடுக்கும் ஆதரவு
(ii) நிதிவசதி பற்றிய தகவல் தருதல்
(iii) கடனுக்கான உத்தரவாதம்

தொழில்முனைவர்களாகக் கூடியவர்கள் இந்த வலைதளத்தை அணுகி, கலந்துரையாடுவதன் மூலம் லோன்களுக்கு பதிவு செய்யவோ, உதவி பெறவோ முடியும். மேலும், இந்த வலைதளம் மத்திய மற்றும் மாநில எஸ்ஸி/ எஸ்டி கார்ப்பொரேஷன்களுக்கும், எஸ்ஸி/ எஸ்டி-யினருக்கான தொழில் சங்கங்களுக்கும் மிக முக்கியமான லிங்கைத் தருகிறது.







B) **CGTMSE**: முதல் தலைமுறை தொழில் முனைவாளர்களுக்கு சொந்தமாக ஒரு குறு மற்றும் சிறு நிறுவனம் அமைக்க வேண்டும் என்னும் கனவு நிறைவேறிட உதவிட, இந்திய அரசின் குறு, சிறு & நடுத்தரத் தொழில்நிறுவன அமைச்சகம் (MSE) கிரெடிட் கேரன்ட்டி ஸ்கீமை (CGS) தொடங்கியது. கடன் வழங்கும் முறையை வலுப்படுத்தி, குறு, சிறு தொழில் பிரிவுகளுக்கு எளிதில் கடன் கிடைக்க வசதியாக இது உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, இந்திய அரசும், SIDBI வங்கியும் சேர்ந்து கிரெடிட் கேரன்ட்டி ஃபண்ட் டிரஸ்ட் ஃபார் மைக்ரோ அண்டு ஸ்மால் எண்ட்டர்பிரைஸஸ் (இஎபஙநஉ) என்ற டிரஸ்ட்டை ஏற்படுத்தின.

## கிரெடிட் கேரன்ட்டி:

ஒரு நிறுவனம் இணை உத்தரவாதம்/ மூன்றாவது தரப்பு உத்தரவாதம் இல்லாமல் கடன் பெறுவதற்கு பக்கபலமாக இருப்பது கிரெடிட் கேரன்ட்டி ஆகும். கிரெடிட் கேரண்ட்டி வழங்கும் நிறுவனம் கடன் தொகையின் பெரும்பகுதிக்கு கவர் தருகிறது. இஎபஙநஉ, வழங்கும் கிரெடிட் கேரண்ட்டியின் கீழ் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள எம் எஸ் எம் இ-க்கள் பயனடைகின்றன.

## CGTMSE அளிக்கும் பயன்களை எவ்வாறு பெறுவது

கடன் வழங்கத் தகுதியுடைய ஒரு நிறுவனம் டிரஸ்ட்டின் மெம்பர் லெண்டிங் நிறுவனங்களில் (MLIs) உறுப்பினராக ஆவதற்காக இஎபஙநஉ அமைப்புடன் ஒருதடவை உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

பின்னர் MLIs-க்கள் தகுதியுடைய கடன் பெறும் நிறுவனத்திற்கு அனுமதிக்கும் கடனுக்காக உத்தரவாதம் கோரி விண்ணப்பிக்கலாம்.

ஏப்ரல்-ஜூன், ஜூலை-செப்டம்பர், அக்டோபர்-டிசம்பர் மற்றும் ஜனவரி-மார்ச் காலாண்டுகளில் வழங்கப்பட இருக்கும் கடன்களுக்காக தொடர்ந்து வரும் காலாண்டு முடிவதற்குள்ளாக உத்தரவாதம் கோரி விண்ணப்பிக்கலாம்.

## முக்கிய அம்சங்கள்

**தகுதியுடைய கடன்வழங்கும் நிறுவனங்கள்**

- ஷெட்யூல்டு வர்த்தக வங்கிகள் (பொதுத்துரை வங்கிகள்/ தனியார் துறை வங்கிகள்/ வெளிநாட்டு வங்கிகள்) மற்றும் நபார்டு வங்கியினால் 'நீடித்த நிலையான பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள குறிப்பிட்ட சில வட்டார ஊரக வங்கிகள்.

**தகுதியுடைய கடன் வசதி**

- ஒரு புதிய அல்லது ஏற்கனவே உள்ள குறு மற்றும் சிறு நிறுவனம் கடன் பெறுவதற்கு ரூ.100 லட்சம் வரை இணை உத்தரவாதம் மற்றும்/ அல்லது மூன்றாவது தரப்பு உத்தரவாதம் இல்லாமல் வழங்கப்படும தவணைக்காலக் கடன்கள் மற்றும்/ அல்லது செயல் மூலதனம் இரண்டுமே.

**உத்தரவாதம் கவர்**

- அனுமதிக்கப்படும் கடன் தொகையில் 50%/ 75%/ 80% & 85% அளவுக்கு கவர் கிடைக்கும்.

**ஹைபிரிட் உத்தரவாதம்**

- இணை உத்தரவாதத்தினால் கவர் ஆகாத பகுதிக் கடனுக்கு உத்தரவாதம் தருவதற்காக புதிதாக "ஹைபிரிட் உத்தரவாதம்" என்பதை இஎபஙநஉ அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு பகுதி இணை உத்தரவாத முறையில், கடன் தொகையின் ஒரு பகுதிக்கு இணை உத்தரவாதம் பெறுவதற்கு MLIs-க்கள் அனுமதிக்கப்படும். அதே வேளையில், மீதியுள்ள கடன் தொகையில் அதிகபட்சமாக ரூ.200 லட்சம் வரை இஎபஙநஉ-யின் கீழ் கவர் பெறலாம்.

**தவணைக்காலம்**

- உத்தரவாதக் கட்டணம் செலுத்தப்படும் தேதியில் இருந்து தொடங்கும் இந்த உத்தரவாதம், தவணைக்காலக் கடன்கள்/ காம்போஸிட் கடன்கள் எனில் ஒப்புக் கொள்ளப்படும் தவணைக் காலம் முழுவதும் மற்றும் செயல் மூலதனம் மட்டுமே தரப்படும் நிறுவனங்களுக்கு 5 ஆண்டுகள் வரையும் அல்லது கேரண்ட்டி டிரஸ்ட் குறிப்பிடும் காலம் வரையும் இந்த உத்தரவாதம் நீடிக்கும்.

**வருடாந்திர உத்தரவாதக் கட்டணம்**

- கடன்களுக்கு:
- ரூ. 5 லட்சம் வரை : 1.00 + ரிஸ்க் பிரிமியம்*
- ரூ. 5 லட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.50 லட்சம் வ்ரை: 1.35 +ரிஸ்க் பிரிமியம் (பெண்கள், குறு நிறுவனங்கள் மற்றும் NER யூனிட்டுகள்) மற்றும் 1.50+ ரிஸ்க் பிரிமியம் (மற்றவர்களுக்கு)
- 50 லட்சத்திற்கும் மேல் மற்றும் 200 லட்சம் வரை: 1.80+ ரிஸ்க் பிரிமியம்

**தற்போது, உதயமிமித்ரா வலைதளம், ஸ்டேண்ட் அப் மித்ரா வலைதளம் மற்றும் PSB 59 நிமிட வலைதளம் ஆகியன தகுதியக் கவனிக்க உதவுகின்றன.**


sidbi

# மார்க்கெட் கனெக்ட்

## A) வர்த்தக மேடைகள்

இந்தியாவில் இ-வர்த்தகம் செய்யும் பிஸினஸ் உருவெடுப்பதால், இப்போது MSMEs நிறுவனங்களுக்கு வரம்பற்ற வாய்ப்புக்கள் திறந்துள்ளன. மேலும், ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், எம் எஸ் எம் இ நிறுவனங்களுக்கான இடவரம்பு எல்லைகள் தகர்க்கப்பட்டன. பல MSMEs நிறுவனங்கள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் சப்ளை செய்வதற்காக தாங்களாகவே அமேஸான் மற்றும் ஃபிளிப்கார்ட் போன்ற வலைதளங்களில் பதிவு செய்துள்ளன.

எந்த ஒரு இ-வர்த்தக தளங்களை விற்பதற்கான நடைமுறை




## B) அரசு இ-மார்க்கெட் (GeM)

அரசு செய்யும் கொள்முதல்களால் MSMEs நிறுவனங்களுக்கு வருவாய் அதிகரிக்கும் மாபெரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. எனினும், பல கடுமையான கொள்முதல் விதிகளின் காரணமாக, அரசு முகமைகளுக்கு நேரடியாக சப்ளை செய்ய முடியாமல் அவை திண்டாடுகின்றன. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும், டிஜிட்டல் வசதிகளை ஊக்கப்படுத்தவும், அரசு இ-மார்க்கெட் (GeM) என்னும் வலைதளத்தை அரசு உருவாக்கியுள்ளது. இதில் பல்வேறு அரசுத் துறைகள்/ அமைப்புக்கள்/ பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சாதாரண பயன்பாட்டில் உள்ள சரக்குகளும் சேவைகளும் ஆன்லைன் மூலம் கொள்முதல் செய்திட உதவி கிடைக்கிறது. பொதுக் கொள்முதல் ஒளிவுமறைவின்றி, திறம்படவும், விரைவாகவும் நடைபெறுவதை அதிகரிப்பதே GeM நோக்கம். இது அரசு அமைப்புக்கள் தங்களது பணத்திற்கு நல்ல மதிப்பு பெற்றிட, ஆன்லைனில் ஏலம் கோருதல், ரிவர்ஸ் இ-ஏலம், மற்றும் தேவைப் பெருக்கம் போன்ற டூல்களை வழங்குகிறது.

*அரசு அமைப்புக்கள் GeM மூலமாக வாங்குவதை நிதி அமைச்சகம் அங்கீகரித்து கட்டாயமாக்கியுள்ளது.*

## முக்கிய அம்சங்கள்:

| | |
|---|---|
| **ஒளிவுமறைவற்ற தன்மை** | விற்பனையாளர்களைப் பதிவு செய்வதில், ஆர்டர்களைப் போடுவதில், பேமென்ட் நடைமுறையில் மனிதர்கள் குறுக்கிடுவதில் இது பெருமளவுக்கு அகற்றி விடுகிறது. இது ஒரு திறந்த வசதி என்பதால், நுழைவுத் தடைகள் இல்லை. அரசுடன் பிஸினஸ் செய்ய விரும்பும் தகுதியுடைய சப்ளையர்கள் இதில் சேரலாம். ஒவ்வொரு நடவடிக்கையின்போதும் பொருள் வாங்குகிறவர், அவரது நிறுவனத்தின் தலைவர், பணம் பேமெண்ட் செய்யும் அதிகாரி மற்றும் விற்பனையாளர்களுக்கு எஸ் எம் எஸ் மற்றும் மின்னஞ்சல் மூலமாகத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. |
| **திறமை** | நேரடியாக வாங்குவதை சில நிமிடங்களில் நிறைவேற்றி விடலாம். அனைத்து நடைமுறைகளும் ஆன்லைனில் நடைபெறுகின்றன. முதலில் இருந்து முடிவு வரை அனைத்தும் ஆன்லைன் டூல்களினால் இணைக்கப்பட்டு, விலைகள் நியாயமானவைதானா என்பதை மதிப்பிட முடிகிறது. |
| **பாதுகாப்பானது** | GeM முற்றிலும் பாதுகாப்பானது. எல்லா ஆவணங்களும் பல்வேறு நிலைகளில் வாங்குகிறவர் மற்றும் விற்பவர்களால் இ-சைன் செய்யப்படுகின்றன. சப்ளையர்கள் இதற்கு முன்பு எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பது ஆன்லைனிலும், MCA 21, ஆதார், பேன் அட்டை போன்ற தரவுத் தொகுப்புக்கள் மூலமாகவும் சரிபார்க்கப்படுகின்றன. மேலும், செபி அங்கீகரித்த கிரெடிட் ரேட்டிங் முகமைகளின் சேவையும் பயன்படுத்தப்பட்டு, சப்ளையர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது மூன்றாவது தரப்பு மூலம் மதிப்பிடப்படுகிறது. |

## பயன்கள்

| | |
|---|---|
| **வாங்குகிறவர்களுக்கு** | பசரக்குகள்/ சேவைகள் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் புராடக்டுகளின் பட்டியல் நிறையக் கிடைக்கின்றன. |
| | தேடி, ஒப்பிட்டு, செலக்ட் செய்து வாங்கும் வசதி |
| | பசரக்குகளையும், சேவைகளையும் தேவைப்படும்போது ஆன்லைனில் வாங்குவது |
| | ஒளிவுமறைவின்றி சிரமமில்லாமல் வாங்குதல் |
| | விற்பனையாளரை தொடர்ந்து ரேட்டிங் செய்யும் சிஸ்டம் |
| | பசப்ளைகளை வாங்குவதற்கும், கண்காணிப்பதற்கும், பேமென்ட்டுகளுக்கும் பயன்படுத்துவோருக்கு சிரமம் தராத டேஷ் போர்டு |
| | சுலபமாக ரிட்டர்ன் செய்யும் பாலிஸி |
| **விற்பனையாளர்களுக்கு** | அனைத்து அரசுத் துறைகளையும் நேரடியாக அணுகலாம். |
| | குறைவான முயற்சியில் மார்க்கெட்டிங் செய்ய ஒரே இடத்தில் எல்லா நடைமுறைகளும் நிகழ்கின்றன. |
| | புராடக்டுகள்/ சேவைகள் ஏலம் விடப்படுவதும்/ ரிவர்ஸ் ஏலமும் ஒரே இடத்தில் |
| | விற்பனையாளர்களுக்கு புதிய புராடக்டுகளைப் பரிந்துரைக்கும் வசதியும் கிடைக்கிறது. |
| | துடிப்பான விலை: மார்க்கெட் நிலவரத்தைப் பொறுத்து அதன் அடிப்படையில் விலைகளை மாற்ற முடிகிறது |
| | பசப்ளைகளை விற்பதற்கும், கண்காணிப்பதற்கும், பேமென்ட்டுகளுக்கும் விற்பனையாளர்களுக்குச் சிரமம் தராத டேஷ் போர்டு |
| | ஒரே சீரான, மாற்றங்கள் இல்லாத கொள்முதல் நடைமுறை |

# <u>வலைதளத்தை எவ்வாறு பயன்படுத்துவது</u>

**வாங்குகிறவர்களுக்கு:**

1. GeM வலைதளத்தில் உங்களைப் பதிவு செய்யுங்கள்
2. தேவைக்கு ஏற்ப புராடக்டை செலக்ட் செய்து அனுப்பி வைக்கலாம்
3. டிமாண்ட் உருவாக்குங்கள்- அனுமதி ஆர்டர் உருவாக்குங்கள்- காண்ட்ராக்ட் ஏற்படுத்துங்கள்.
4. விற்பவர் சரக்குகளை/ சேவைகளை கன்சைனிக்கு குறிப்பிட்ட டெலிவரி தேதிக்குள் டெலிவரி செய்து, ஜி இ எம் வலைதளத்தில் ஆன்லைனில் இன்வாய்ஸ் உருவாக்கலாம்.
5. 10 நாட்களுக்குள் கன்சைனி ரெசிப்ட் அண்டு அக்செப்டன்ஸ் சர்ட்டிபிகேட் (CRAC) உருவாக்கப்படுகிறது.
6. வாங்குகிறவர் பில் பரிசீலிப்பது CRAC—ஐ கன்சைனி உருவாக்கிய 2 நாட்களுக்குள்)

**விற்பவர்களுக்கு:**

1. GeM வலைதளத்தில் உங்களைப் பதிவு செய்யுங்கள்
2. உங்களுடைய புராடக்டுகளை குறிப்பான புராடக்ட் பிரிவில் பட்டியலிடலாம்.
3. ஆர்டர் கிடைத்ததும் அதன் விவரங்களை வலைதளத்தில் உரிய முறைப்படி என்ட்டர் செய்து, கன்சைனிக்கு புராடக்டை டெலிவரி செய்யலாம்.
4. ஒரு ஆர்டர் வெற்றிகரமாக டெலிவரி செய்யப்பட்டது, கன்சைனி அந்த புராடக்டு காண்டராக்டு குறிப்பளவுக்குள் இருக்கிறதா என்பதைச் சரிபார்ப்பார். ஏற்பது/ நிராகரிப்பது ஆன்லைன் CRAC மூலம் நடைபெறுகிறது.
5. CRAC உருவாக்கப்பட்டதும், வாங்குகிறவர் பில்லை பரிசீலனை செய்து, பேமென்ட் அதிகாரிக்கு உரிய நேரத்தில் பேமென்ட் செய்வதற்காக அனுப்புவார்.

## C) MSME மார்ட்

உலகளாவிய பிஸினஸ் டு பிஸினஸ் (B2B) வலைதளமான MSME மார்ட் டிஜிட்டல் முறையில் பிஸினஸ் சேவைகளை MSME நிறுவனங்களுக்கு வழங்குகிறது. இதன் பல அம்சங்களில், MSME நிறுவனங்கள் சரக்குகள்/ சேவைகளை வாங்கவும்/ விற்கவும் ஆன்லைன் மார்க்கெட்டை ஏற்படுத்தித் தருகிறது. இது தேசிய சிறுதொழில் கார்ப்பொரேஷனின் (NSIC) முன்முயற்சியாகும். இந்த வலைதளத்தில் MSME நிறுவனங்கள் பெறுவதற்குப் பல வசதிகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை:

| | |
|---|---|
| புராடக்டு ஜெனரிக் ஹோம் பேஜ் | • வாங்குகிறவர்களுக்கும், விற்கிறவர்களுக்கும் தனித்தனியாக புராடக்டு விவரங்களை அளிக்கும் ஜெனரிக் ஹோம் பேஜ் |
| பசப்-கான்ட்ராக்டு எக்சேஞ்ஜ் | • இதன் மூலமாக, MSME நிறுவனங்கள் வினியோகஸ்தர்களையும், அல்லது விற்பனை உரிமை பெறும் ஃபிரான்ச்சைஸ்களையும் தொடங்கலாம். |
| ஸ்கிராப்களை வாங்குதல்/ விற்றல் | • MSME நிறுவனங்கள் ஸ்கிராப்களை மற்ற MSME நிறுவனங்களுக்கு வாங்கலாம்/ விற்கலாம். |
| மூலப்பொருள் டிமாண்டுகளை ஆன்லைனில் பெருக்குதல் | • MSME நிறுவனம் தனது மூலப்பொருள் தேவைகளை பகிர்ந்து கொண்டு, அதை தயாரிப்பாளர்/ வினியோகஸ்தருக்கு அனுப்பலாம். |
| பொருட்காட்சி மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவல் | • தேசிய/ சர்வதேச MSME பொருட்காட்சிகள் மற்றும் நிகழ்வுகள் பற்றி உறுப்பினர்கள்/உறுப்பினர் அல்லாதவர்கள் பெறலாம். |
| கொட்டேஷன் டூலுக்கு வேண்டுகோள் | • MSME நிறுவனங்கள் ஆன்லைனில் கொட்டேஷன்கள் கோரலாம். |
| சுயமாக வலைதளத்தை ஏற்படுத்தும் டூல் | • MSME நிறுவனங்கள் தங்களது சொந்த வலைதளத்தை உருவாக்கி, அதை சமூக ஊடகங்களில் இணைக்கலாம். |
| பழைய மெஷின்களை வாங்குவது/ விற்பது | • பழைய மெஷின்களை MSME நிறுவனங்களுக்கு விற்கலாம். |
| தொடர்புப் படுத்தும் டேட்டா ஆதாரம் | • இந்த டேட்டாபேஸில் இருந்து வெவ்வேறு MSME நிறுவனங்கள் பற்றிய விவரங்களைப் பெறலாம். |
| தேசிய/ சர்வதேச டெண்டர்கள் பற்றிய தகவல்கள் | • டெண்டர்கள் பற்றிய தகவல்களை பல ஃபில்ட்டர்களைப் பயன்படுத்தி ஒரு கம்பெனி பெறலாம். |
| பிஸினஸ் ஆலோசனைகள் | • MSME நிறுவனங்கள் தங்களது பிஸினஸ் அளவைப் பெருக்குவதற்காக பல ஆலோசனைகளைப் பெறலாம். |
| ஹிட்ஸ் நிலைமைகள் | • MSME வலைதளப் பக்கங்களை எத்தனை யூஸர்கள் பார்த்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். |
| பிஸினஸ் கன்சல்ட்டன்ஸி மற்றும் ரிப்போர்ட்டுகள் | • பிஸினஸ் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும், தொடர்புடைய அறிக்கைகளையும் பெறலாம். |
| இணைப்பு மற்றும் கையகப்படுத்தல் | • பிஸினஸ் அளவைப் பெருக்குவதற்காக ஒரு MSME தனது இணைப்பு & கையகப்படுத்தும் தேவைகளை பகிரலாம். |
| மதிப்பு கூட்டு சேவைகள் | • மருத்துவ வசதிகளுக்கு சிறப்பு டிஸ்கவுன்ட்டுகள் |
| பேமென்ட் கேட்வே | • பேமென்ட் கேட்வேக்கள் மூலமாக சுலபமான பேமென்ட்டுடன் கூடிய ஆன்லைன் மெம்பர்ஷிப் |

# ஆன்லைன் மார்க்கெட்பிளேஸ்

MSME நிறுவனங்களுக்காகவே பிரத்யேகமாக வடிவமைத்து, உருவாக்கப்பட்ட பொதுவான ஆன்லைன் மார்க்கெட் தலங்களை MSME மார்ட் வழங்குகிறது. MSME மார்ட் தரும் வசதிகளைப் பயன்படுத்தி, வலைதளம் மூலமாக எம் எஸ் எம் இ நிறுவனங்கள் தங்களது புராடக்டுகளை காட்சிப்படுத்தி விற்கலாம்.




**ஆதாரங்கள்:** rbi.org.in; vikaspedia.in; psbloansin59minutes.com; udyamimitra.in; india.gov.in; cgtmse.in; npci.org.in; http://www.msmemart.com/

மேலும் அதிகத் தகவல் பெற அல்லது இந்த டிஜிட்டல் வசதிகளின் பயன்களைப் பெற பார்க்கவும்:

PSBLoans; https://www.psbloansin59minutes.com/home
BHIM-UPI https://www.bhimupi.org.in/
RXIL: https://www.rxil.in/
Udyamimitra: https://udyamimitra.in/
CGTMSE: https://www.cgtmse.in/
GeM: https://gem.gov.in/
MSME Mart: http://www.msmemart.com/

## விரைவே மிகச்சிறந்தது

வருங்காலத்தில் நிதிப்பிரிவுச் சேவைகள் டிஜிட்டல் மயமாகப் போகின்றன. டிஜிட்டல் வசதிகளினால் வங்கிகளின் வேலை எளிதானது மட்டுமல்ல, எம் எஸ் எம் இ நிறுவனங்களுக்கு அவை விரைவாகவும், சிரமமின்றியும், சேவைகளை வழங்குகின்றன. கண்ணை மூடித்திறப்பதற்குள் விருப்பங்களும், சுவைகளும், தேவைகளும் மாறிவிடும் இக்காலத்தில் டிஜிட்டல்மயம் என்பது ஒரு ஆப்ஷன் அல்ல, அது ஒரு கட்டாயம். நிதிப்பிரிவில் ஏற்படும் மாற்றங்களையும், அப்டேட்டுகளையும் நிதித்துறை நிறுவனங்களும், எம் எஸ் எம் இ நிறுவனங்களும் தெரிந்து வைத்து, மாறும் காலத்திற்கு ஏற்ப தங்களை மேம்படுத்த வேண்டியது முக்கியமாகும், பல்வேறு டிஜிட்டல் வசதிகள் பற்றிய கண்ணோட்டத்தையும், அவற்றின் அம்சங்களை நாம் பயன்படுத்துவதற்கான வழிவகைகளையும் உங்களுக்கு எடுத்துரைக்கும் முயற்சிதான் இந்த தகவல் திரட்டு. இந்தச் சேவைகளினால் நீங்கள் அதிகபட்சம் பயனடைந்து உங்களுடைய வாழ்க்கையில் டிஜிட்டல் மயமாக்கியிருப்பீர்கள் என நம்புகிறோம். இந்தத் தகவல் திரட்டை வாசித்துவிட்டு எங்களுக்குத் தெரிவியுங்கள், அடுத்து என்ன வாசிக்க விரும்புகிறீர்கள் என்பதை எங்களுடன் பகிருங்கள்.

## விளக்கம்

**இந்தத் தொகுப்புக்கள் புதிய/ ஏற்கனவே உள்ள ஸ்வவலம்பிகளுக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் (SIDBI) கருத்தாக இல்லாமல் இருக்கலாம் அல்லது இந்த விஷயத்தை முழுமையாக ஆராயாமல் இருந்திருக்கலாம்.**

**இந்த ஆவணம் SIDBI வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட மிஷன் ஸ்வவலம்பன் திட்டத்தின் கீழான நல்லதொரு முன்முயற்சியாகும். செயல்படுத்தப்படும் வெவ்வேறு புராஜெக்டுகள் மற்றும்/ அல்லது ஆதாரங்களில் இருந்து இவை தொகுக்கப்பட்டுள்ளன. தவறுகளோ, விடுபடல்களோ தவிர்க்கப்பட வேண்டும் என்னும் நோக்குடன் ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்ட வேளையில், இந்த வெளியீட்டில் ஏதேனும் தவறுகள்/ விடுபடல்கள் இருக்குமானால், அதற்காக எவருக்கும் பொறுப்பேற்று காரணம் கூற வேண்டிய பொறுப்பு நஜஈஆஐ வங்கிக்கு கிடையாது.**